EMBASSY OF SRI LANKA
KUWAIT

## குவைத் அரசு பிரகடனம் செய்துள்ள பொதுமன்னிப்பு

குவைத்தில் வீசா காலவதியாகி சட்டவிரோதமாக தங்கியுள்ள வெளிநாட்டவர்கள் பயன் பெறும் வகையில் எதிர்வரும் மார்ச் 17 , 2024 முதல் ஜூன் 17 , 2024 வரையிலான மூன்று மாத காலப்பகுதியை பொது மன்னிப்பு காலமாக குவைத் அரசு பிரகடனம் செய்துள்ளது.

இப்பொது மன்னிப்பின் கீழ் வீசா காலாவதியானவர்கள் வீசாவினை புதுப்பித்துக்கொண்டு சட்ட ரீதியாக தங்கியிருக்கவும், விரும்பியோர் தமது நாட்டுக்கு திரும்பிச் செல்லவும் வாய்ப்பளிக்கப்படுகிறது. மேலும் இவ்வாறு தாய் நாடு திரும்புவோர் மீண்டும் எவ்வித தடையுமின்றி தொழில் நிமித்தம் குவைத் நாட்டிற்கு திரும்ப முடியுமென குவைத் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**கீழ்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்வோர் பொதுமன்னிப்பில் பயனடைய தகைமை பெறுவர்.**

A. கடந்த 2024.03.14 ஆம் திகதிக்கு முன்னர் தமது வேலைத்தளங்களில் இருந்து வெளியேறியமைக்காக (இன்ஹாஷ் அல்லது தகய்யுப்) தமது அனுசரணையாளர்களால் (கபீலினால்) குவைத் உள்விவகார அமைச்சில் முறைப்பாடு செய்யப்பட்டிருப்போர் அல்லது 2024.03.14 ஆம் திகதிக்கு முன்னர் குவைத் வதிவிட வீசா காலாவதியாகி இன்று வரை புதிப்பிக்காமல் இருப்போர். இது தவிர, வேறு எந்தவொரு குற்றச்செயல்களிலும் ஈடுபட்டமைக்கான போலீஸ் முறைப்பாடுகள் அல்லது நீதிமன்ற தீர்ப்புகள் இல்லாமலிருப்போர்.

B. 2024.03.14 ஆம் திகதிக்கு பின்னர் பணியிடங்களை விட்டு வெளியேறுவோருக்கு எதிராக அனுசரணையாளர்கள் உள்விவகார அமைச்சில் முறைப்பாடு செய்தாலும் அத்தகையோர் இப்பொது மன்னிப்பின் மூலம் பயனடைய முடியாது. அதே போன்று 2024.03.14 ஆம் திகதிக்கு முன்னர் தமது பணியிடங்களை விட்டு வெளியேறியோருக்கு எதிராக

Sri Lanka Embassy in Kuwait

அனுசரணையாளர்கள் உள்விவகார அமைச்சில் இதுவரை முறைப்பாடு செய்யாதிருப்பின் அத்தகையோரும் இப்பொது மன்னிப்பின் மூலம் பயனடைய முடியாது

C. தாயகம் செல்லும் நோக்கில் பயண ஆவணங்களை தயார் செய்ய ஏற்கனவே தூதரகத்தில் தம்மை பதிவு செய்து பதிவிலக்கங்களை (உ+ம்: OUT/1532) பெற்றுக் கொண்டுள்ளோரின் பயண ஆவணங்கள் தயார் நிலையில் இருப்பதனால் அவர்களுக்கான அறிவித்தல் தூதரகத்தின் FACEBOOK இல் வெளியிடப்படும் வரும் வரை காத்திருக்கவும். இத்தகையோர் மீண்டும் தம்மை பதிவு செய்து கொள்ளும் நோக்கில் தூதரகத்துக்கு வருகைதர அவசியமில்லை என்பதனை அன்புடன் அறியத் தருகிறோம்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள A,B ஆகிய நிபந்தனைகளை பூர்த்தி செய்பவர்கள் கீழ்வரும் ஒழுங்கில் நாட்டிலிருந்து வெளியேற அனுமதிக்கப்படுவர்.

1. **செல்லுபடியான கடவுச்சீட்டொன்றை தம்வசம் வைத்துள்ளோர்.**

I. கடவுச்சீட்டில் குவைத் நாட்டின் வதிவிட வீசாவினை (அகாமா) பெற்றமைக்கான குறைந்த பட்சம் ஒரு வீசா ஸ்டிக்கர் ஆவது ஒட்டப்பட்டிருப்பின் அத்தகையோர் தூதரகத்துக்கு வருகைதர வேண்டிய அவசியமில்லை. விமான பயணசீட்டை பெற்றுக் கொண்டு எத்தகைய தண்டப்பணமும் செலுத்தாமல் தாயகம் நோக்கி செல்ல முடியும்.

II. குவைத் நாட்டுக்கு வருகை தரும் போது பயன்படுத்திய கடவுச்சீட்டுக்கு பின்னர் பெற்றுக் கொண்ட புதிய செல்லுபடியான கடவுச்சீட்டொன்றை வைத்திருப்போர் வதிவிட வீசா பெற்றிருக்கவில்லை எனில், குறித்த கடவுச்சீட்டின் உரிமையாளர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு காரியலாயத்தில் குறித்த கடவுச்சீட்டின் விபரங்களை பதிவு செய்ததன் பின்னர் விமான பயணசீட்டை பெற்றுக் கொண்டு எத்தகைய தண்டப்பணமும் செலுத்தாமல் தாயகம் நோக்கி செல்ல முடியும்.

மேலே உள்ள i,ii தொடர்பாக பயணத்துக்கு முன்னர் "தகய்யுப்" தவிர்ந்த ஏதேனும் வழக்குகள் அல்லது முறைப்பாடுகள் நிலுவையில் உள்ளதா என கீழே உள்ள நிலையங்களில் பரிசீலித்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

Sri Lanka Embassy in Kuwait

- ஷுவைக், தவ்வாரிதாம் இல் அமைந்துள்ள கடவுசீட்டு விவகாரங்களுக்கான விசாரணை பிரிவு (Passport Investigations Affairs) – கட்டிட இலக்கம் 3

  (அமைவிடத்தை பார்வையிட ஸ்கான் செய்யவும்)

- தஜீஜ் பிரதேசத்தில் அமைந்துள்ள வதிவிட விவகாரங்களுக்கான நிர்வாகப் பிரிவு

  (அமைவிடத்தை பார்வையிட ஸ்கான் செய்யவும்)

காலாவதியான கடவுச்சீட்டுக்களை வைத்திருப்போர் அவற்றை செல்லுபடியானதாக மாற்றிக் கொள்ள தூதரகத்துக்கு வருகை தருவது அவசியமாகும்.

**2. கடவுசீட்டு இல்லாதவர்கள்**

கைவசம் கடவுச்சீட்டு இல்லாத இதுவரை தூதரகத்தில் தங்களை பதிவு செய்து கொள்ளாதோர் உங்களுக்கான பயண ஆவணங்களை தயார் செய்ய கீழ்வரும் ஆவணங்களுடன் தூதரகத்துக்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

I. கடவுச்சீட்டுக்காக அண்மையில் எடுத்த புகைப்படங்கள் – 04
II. குவைத் நாட்டுக்கு வர பயன்படுத்திய கடவுச்சீட்டின் தெளிவான பிரதி ஒன்று அல்லது குவைத் அடையாள அட்டையின் (பத்தாகா) பிரதி ஒன்று

கடவுச்சீட்டின் தெளிவான பிரதி அல்லது குவைத் அடையாள அட்டையின் பிரதி (பதாகா) ஆகியன கைவசம் இல்லாதவர்கள் இலங்கை தேசிய அடையாள அட்டையின் பிரதி ஒன்றை அல்லது குவைத் நாட்டுக்கு வர பயன்படுத்திய நுழைவு வீசாவின் பிரதி ஒன்றை எடுத்து வருவது அவசியமாகும்.

Sri Lanka Embassy in Kuwait

**3. புதிய நடைமுறைகளின்படி தண்டப்பணம் செலுத்தி தங்கள் வதிவிட உரிமையை (காதம் / ஷூன் ) சட்டபூர்வமாக்கிக் கொண்டு குவைத் நாட்டில் தொடர்ந்தும் தொழில் புரிய விரும்புபவர்கள் கீழ்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.**

I. இறுதியாக பணிபுரிந்த வீட்டின் அல்லது நிறுவனத்தின் சட்டபூர்வ அனுசரணையாளரிடம் (கபீல்) இருந்து வேறொரு வீட்டில் அல்லது நிறுவனத்தில் பணியாற்றுவதற்கான அனுமதியை பெற்றிருத்தல் (தனாசல்).

II. வீசா விதிமுறைகளை மீறியதற்காக ஓர் நாளைக்கு 2 தீனார்கள் வீதம் குவைத் அரசினால் விதிக்கப்படும் தண்டப்பணத்தை செலுத்துதல். தண்டப்பணத்தின் அதியுட்ச தொகையாக 600 தீனார்கள் செலுத்த நேரிடலாம்.

III. இறுதியாக பணிபுரிந்த நிறுவனம் தற்போது மூடப்பட்டு இருந்தால் இது தொடர்பில் ஷூனில் முறைப்பாடொன்றை மேற்கொண்டு வேறொரு நிறுவனத்துக்கு மாற்றம் பெற ஷூனினால் வழங்கப்படும் அனுமதி ஆவணத்தை பெற்றிருத்தல்.

IV. செல்லுபடியான கடவுச்சீட்டு

**4. செல்லுபபடியான வதிவிட வீசா (அகாமா) இன்றி தங்கியிருக்கும் குழந்தைகள் மற்றும் சிறுவர்களை இலங்கைக்கு அழைத்து செல்லல்**

கீழ்வரும் ஆவணங்களை சமர்ப்பிப்பதன் ஊடாக சிறுவர்களை தூதரகத்தில் பதிவு செய்து கொள்வது அவசியமாகும்.

I. பிறப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் வைத்தியசாலையினால் வழங்கப்படும் ஆவணம் (Pink Paper) .

II. கடவுச்சீட்டுக்கான நீல நிற பின்னணியில் அண்மையில் எடுத்த புகைப்படங்கள் – 04

**தகைமை பெற்ற அதிகாரி**
**இலங்கை தூதரகம் / குவைத்**
**பதிவேற்றம்: 2024.03.20, அதிகாலை 3.30**

Sri Lanka Embassy in Kuwait